

# தி.மு.க. இளைஞர் அணி

## என் உயிரினும் மேலான..!

### கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டி

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலுடன் தி.மு.க. இளைஞர் அணி மாவட்ட அளவில் நடத்திய **'என் உயிரினும் மேலான..!'** பேச்சுப் போட்டியில் 17 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். அந்தப் போட்டிகளில் 913 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ள நிலையில், அடுத்த கட்டமாக மண்டல அளவிலான போட்டிகள் கீழ்க்கண்ட இடங்களில் நடைபெறவுள்ளன.

**13-10-2024, ஞாயிற்றுக்கிழமை**

| வ. எண் | வருவாய் மாவட்டம் | போட்டி நடைபெறும் இடம் | நடுவர்கள் | ஒருங்கிணைப்பாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | சென்னை, செங்கல்பட்டு | அன்பகம், தி.மு.க. இளைஞர் அணி அலுவலகம். 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-18. | வழக்கறிஞர் அருள்மொழி, எஸ்.கே.பி.கருணா, இந்திரகுமார் தேரடி | எஸ்.ஜோயல் |
| 2 | விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி, புதுச்சேரி | டி.கே.பி. திருமண மண்டபம், திண்டிவனம்-மரக்காணம் சாலை, திண்டிவனம், விழுப்புரம்-1. | பேராசிரியர் சுப.வீரபாண்டியன், மருத்துவர் ஷஃபி சுலைமான், தமிழ் காமராசன் | ப.அப்துல் மாலிக் |
| 3 | காஞ்சிபுரம், திருவள்ளூர், இராணிப்பேட்டை, வேலூர், திருவண்ணாமலை | கே.பி.ஜெ.மஹால், திமிரி, மருதம்பாடி, இராணிப்பேட்டை-21. | முனைவர் சபாபதி மோகன், மில்டன், மருத்துவர் ஹபீஸ் | க.பிரபு |
| 4 | நாமக்கல், சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர் | சப்தகிரி பொறியியல் கல்லூரி, சேலம்-பெங்களூரு நெடுஞ்சாலை, பெரியன்னஹள்ளி, தருமபுரி-5. | மருத்துவர் எழிலன் எம்.எல்.ஏ., வழக்கறிஞர் ராஜீவ்காந்தி, டான் அசோக் | பி.எஸ்.சீனிவாசன் |
| 5 | கரூர், திருப்பூர், கோவை, ஈரோடு, நீலகிரி | தளபதி அரங்கம், கலைஞர் அறிவாலயம், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக அலுவலகம், திருப்பூர்-4. | கோவி.லெனின், வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, அமுதரசன் | கே.இ.பிரகாஷ், எம்.பி. |
| 6 | திருச்சி, அரியலூர், பெரம்பலூர், திருவாரூர், தஞ்சாவூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், புதுக்கோட்டை, காரைக்கால் | பிலோமினா ஷாப்பிங் மால், வினோதகன் மருத்துவமனை எதிரில், அருளானந்தா நகர், மேற்கு விரிவாக்கம், தஞ்சாவூர்-7 | திண்டுக்கல் லியோனி, மருத்துவர் யாழினி, பொள்ளாச்சி சித்திக் | நா.இளையராஜா, சி.ஆனந்தகுமார் |
| 7 | மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை, விருதுநகர் | பி.ஆர்.மஹால், ஆலாத்தூர், ஊமச்சிக்குளம்-கடச்சனேந்தல் சாலை, மதுரை. | நாஞ்சில் சம்பத், எம்.எம்.அப்துல்லா எம்.பி., வே.மதிமாறன் | ஜி.பி.ராஜா |
| 8 | இராமநாதபுரம், திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, | சுப்புலட்சுமி திருமண மண்டபம், பேருந்து நிலையம் அருகில், நாங்குநேரி, திருநெல்வேலி. | பொன்.முத்துராமலிங்கம், செந்தில்வேல், சூர்யா கிருஷ்ணமூர்த்தி | இன்பா ஏ.என்.ரகு |

**பேச்சுப் போட்டிக்கான விதிமுறைகள் :**

● மண்டல அளவிலான பேச்சுப்போட்டிகள் காலை 9 மணிக்கே தொடங்கும். எனவே முதல் நாளே நடுவர்களும் பங்கேற்பாளர்களும் போட்டி நடைபெறும் பகுதிக்கு வந்துவிடவேண்டும். ● பங்கேற்பாளர்கள் தங்களுடன் ஒருவரை அழைத்து வரலாம். அவர்கள் தங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. ● போட்டி நடைபெறும் அன்று, காலை மற்றும் மதிய உணவு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ● பங்கேற்பாளர்கள் கீழ்க்கண்ட ஐந்து தலைப்புகளில் மூன்று தலைப்புகளைத் தங்கள் விருப்பத் தலைப்பாகத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

● **என்றென்றும் பெரியார்-ஏன்?** ● **அண்ணாவும் மாநில சுயாட்சியும்** ● **கலைஞர் - நவீன தமிழ்நாட்டின் சிற்பி** ● **திராவிட மாடல் நாயகர் மு.க.ஸ்டாலின்** ● **தமிழ்நாட்டுக் குடும்பங்களில் தி.மு.க**

மூன்று விருப்பத் தலைப்புகளில் நடுவர்கள் தரும் ஒரு தலைப்பில் போட்டியாளர்கள் பேச வேண்டும்.

● பேசுவதற்கான நேரம் ஐந்து நிமிடங்கள். மூன்று நிமிடங்களில் முதல் எச்சரிக்கை மணி ஒலிக்கும். இரண்டாம் எச்சரிக்கை மணி ஒலித்ததும் பேச்சை முடித்துக்கொள்ள வேண்டும்.

**போட்டியில் கலந்துகொள்ளும் அனைவருக்கும் அன்பும் வாழ்த்தும்.**

**அன்பகம்,** சென்னை – 18.
நாள் : 08–10–2024.

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், சன் குழுமத்தின் தலைவர் கலாநிதிமாறன் ஆகியோர் நேற்று (11.10.2024) பெசன்ட் நகர், மின் மயானத்தில், முரசொலி செல்வம் அவர்களின் உடலுக்கு மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினர்.



சென்னை, கோபாலபுரம் இல்லத்தில், நேற்று (11.10.2024) முரசொலி செல்வம் அவர்களின் உடலுக்கு, திரைப்பட நடிகர் பார்த்திபன் மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு ஆறுதல் கூறினார்.



சென்னை, கோபாலபுரம் இல்லத்தில், நேற்று (11.10.2024) முரசொலி செல்வம் அவர்களின் உடலுக்கு நக்கீரன் இதழ் ஆசிரியர் நக்கீரன் கோபால் மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு ஆறுதல் கூறினார்.